FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்றவிசாரணை முறை சட்டம்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069066

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் Year: ஆண்டு 2025 FIR No. முத.அ. எண் 3/2025 Date: நாள் 16.07.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7 of the prevention of Corruption Act 1988, as amended by the prevention of Corruption (Amendment) Act, 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 16.07.2025 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.20 Hrs Time to : நேரம் வரை 14.00 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2025 Time : நேரம் 16.30 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.07.2025 Time : நேரம் 16.30 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ஆங்கிலம் - computer typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 13. கி.மீ. தெற்கே

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி நாகப்பட்டினம் நகராட்சி 1 வார்டு தெற்கு வெளிதை நகர் ஊர் மற்றும் அருகாமை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.M. தினகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அலுவலக உதவியாளர் (g) Address : முகவரி மாவட்ட அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

V.A. அன்புராஜ், வயது 52/2025, ந/மை. அலுவலகம், ஊராட்சி செயலர், தெற்குவெளிதை நகர் ஊராட்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் மாலை நேரம் ஆனதால்.

- விசாரணை தொடர்கிறது -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணித்து சமர்பிக்கப்படுகிறது இன்று 16.07.2025 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அய்வாளர் கரமேஷ் குமார் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் அலுவலக பொறுப்பில் இருந்தபோது திரு.M.குணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர். M.குணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 16.07.2025 ஆம் தேதி 11.20 மணி முதல் 14.00 மணி வரை நாகப்பட்டினம் தாலுக்கா மற்றும் மாவட்டம், தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, ஊராட்சி மன்ற அலுவலக அறையில் ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜா என்பவரிடம் விசாரணை செய்து சோதனை செய்தபோது, அவர் தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூ.52,500/- எடுத்து ஆஜர் செய்த பணத்தை, 100 நாள் வேலை செய்யும் கிராமவாசிகள் பெயர்களில் வேலை

(கணிக் நாளினர் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது /. மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/7/2025 அன்பாய் ஆ.அன்புராஜா

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
16.7.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police No. என் .....

16.07.2025/17.30Hrs. Vigilance & Anti-Corruption Nagapattinam

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-

நடைபெற்றதாக பொய்யாக பில் போட்டு கொடுத்து, அதற்குண்டான பணத்தை அவர்கள் வேலை செய்யாததால், அவர்களிடம் இருந்து திரும்ப வசூல் செய்து பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையிலும், அந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை என்பதாலும், சந்தேகத்துடன் கூடிய மேற்படி கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் அந்த தொகை ரூ.52,500/- திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கண்டபடி கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.52,500/- மற்றும் திரு.A.அன்புராஜா, வயது.52/2025, த/பெ.ஆறுமுகம், ஊராட்சி செயலர், தெற்குபொய்கை நல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகம், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரது வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். மேற்படி திரு.A.அன்புராஜா, வயது.52/2025, த/பெ.ஆறுமுகம், ஊராட்சி செயலர், தெற்குபொய்கை நல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகம், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்- M.குணசேகரன் 16/7/2025 (M.குணசேகரன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். நாள்.16.07.2025. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 16.07.2025 ஆம் தேதி காலை சுமார் 11.20 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, 85-தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தை திரு.M.குணசேகரன், த/பெமுத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.கரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர்: நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற செயலர் திரு.ஆ.அன்புராஜா என்பவர் 100 நாள் வேலை செய்யும் கிராமவாசிகள் மற்றும் பினம்பிங் வேலை செய்யும் தொழிலாளர்களிடம் இருந்து அவர்களுக்கு தினசரி வேலை போட்டு கொடுப்பதற்காகவும், மேலும் அவர்கள் வேலை செய்யாத நாட்களிலும் வேலை போட்டுக்கொடுத்து, அதற்குண்டான தொகையை மாதந்தோறும் கையூட்டாக கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை இன்று 16.07.2025 ஆம் தேதி தஞ்சாவூர்

மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு காலை 10.00 மணியளவில் வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் அலுவலர்கள் சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 10.30 மணியளவில் புறப்பட்டு, தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சுமார் 11.20 மணியளவில் வந்து, தெற்குபொய்நல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்த ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜா மற்றும் கம்ப்யூட்டரில் பணி செய்து கொண்டிருந்த கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் செல்வி. அபிநயா, த/பெ.பாலசுப்பிரமணியன், தெற்குபொய்கைநல்லூர் திருமதி.மாலா, க/பெ.பிரபாகரன், சுகாதார ஊக்குனர், திருமதி.உமாராணி, க/பெகார்த்திகேயன், தூய்மை காவலர் ஆகியோர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகமானது 85-தெற்குபொய்கைநல்லூர் கிராமத்தில் தென்வடலாக செல்லும் அக்கரைப்பேட்டை to வேளாங்கண்ணி ரோட்டில், ரோட்டிற்கு கிழக்கு பக்கம், மேற்கு பார்த்த வாசல் உள்ள ஒரு தளம் மட்டும் உள்ள அரசு கட்டிடம் ஆகும். முதலில் சிறிய வராண்டாவும், அதற்கு தெற்கு பக்கம் ஒரு சிறிய வாயிலுடன் கூடிய அறையும், வராண்டாவிற்கு கிழக்கு பக்கம் ஊராட்சி மன்ற அலுவலக அறையும் அமைந்துள்ளது. மேற்படி ஊராட்சி மன்ற அலுவலக அறையில் தென்புற சுவரை ஒட்டி போடப்பட்டிருந்த மேஜைக்கு கிழக்கு பக்கம் இருந்த சேரில் மேற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜா என்பவரிடம் விசாரணை செய்து சோதனை செய்ய, அவர் தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூ.52,500/- (500 x 104, 200 x 2, 100x 1) எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது பர்சில் ரூ.142/- இருந்து ஆஜர் செய்தார். மேற்படி திடீர் ஆய்வின் போது ரதி ராமநாதன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-2, வட்டார வளர்ச்சி அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர் தகவலின் சொன்னதன் பேரில் தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்தவரிடம் திடீர் ஆய்வு சோதனை விவரம் பற்றி தெரிவித்து, உடன் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் அவரும் சம்மதித்து உடன் இருந்தார். பிறகு ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜாவிடம் மேற்படி பணம் ரூ.52,500/- பற்றி கேட்க தெற்கு பொய்கை நல்லூர் ஊராட்சி மன்ற கட்டிடம் கட்டிவருவதற்கு 100 நாள் வேலை செய்யும் கிராமவாசிகள் பெயர்களில் வேலை நடைபெற்றதாக பில் போட்டு கொடுத்தேன், அதற்குண்டான பணத்தை அவர்கள் வேலை செய்யாததால், அவர்களிடம் இருந்து திரும்ப வசூல் செய்து பெற்றுக்கொண்டேன் என தெரிவித்தார். அது தொடர்பாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. ரதி ராமநாதன் அவர்களிடம் விளக்கம் கேட்க, அவ்வாறு வசூல் செய்வது தவறான செயல் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் ரூ.52,500/-ம் 100 நாள் வேலை செய்யும் கிராமவாசிகள் பெயர்களில் வேலை

நடைபெற்றதாக பொய்யாக பில் போட்டு கொடுத்து, அதற்குண்டான பணத்தை அவர்கள் வேலை செய்யாததால், அவர்களிடம் இருந்து திரும்ப வசூல் செய்து பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையிலும், மேலும் அந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை என்பதாலும், அந்த சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த தொகை ரூ.52,500/- திடீர் ஆய்வில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் பர்சில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.142/-ம் அவரது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணம் ரூ.142/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் கம்ப்யூட்டரில் பணியில் இருந்த கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் செல்வி. அபிநயா என்பவரிடம் விசாரிக்க, அவர் தன்னிடம் இருந்து 220/- எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் ரூ.220/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதிமாலா, சுகாதார ஊக்குனர், என்பவரிடம் விசாரிக்க, அவர் தான் வைத்திருந்த பையில் இருந்து 24700/- எடுத்து ஆஜர் செய்து, அதில் ரூ.19500/- தான் குழுவில் இருந்து தற்போது பெற்று வந்த பணம் என்றும், ரூ.5200/- தனது சொந்த பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்தேன் என தெரிவித்தார். மேற்படி அவர் சொன்ன விவரங்களை விசாரணை செய்ததில், அது உண்மை என தெரியவந்தால், அந்த தொகை மொத்தம் ரூ.24700/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.உமாராணி, தூய்மை காவலர், என்பவரிடம் விசாரிக்க, அவர் தன்னிடம் இருந்து 120/- எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் ரூ.120/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நேரடியாக வசூல் செய்து, அரசுக்கு செலுத்தப்படும் இனங்கள் பற்றி ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜா விடம் விசாரிக்க, தற்போது நேரடியாக பணமாக எந்த தொகையும் வசூல் செய்யப்படுவதில்லை என்றும், வீட்டு வரி, தண்ணீர் வரி, தொழில் வரி ஆகியவை POS மெசின் மூலம்தான் வசூலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். அதனை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. ரதி ராமநாதன் என்பவரும் ஊராட்சி செயலர் கூறுவது சரிதான் என்று தெரிவித்தார். மேலும் ஊராட்சி செயலரிடம் அலுவலகத்தில் வேறு எதாவது அரசுக்கு செலுத்தவேண்டிய பணம் எதுவும் உள்ளதா என கேட்க, அவ்வாறு எதுவும் பணம் கையில் இல்லை என்றும், வசூல் செய்து கட்டவேண்டிய நிலுவைத் தொகை கையிருப்பு எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். ஊராட்சி மன்ற வருகை பதிவேடு பற்றி கேட்க தெற்குபொய்கைநல்லூர் பணியாளர் வருகை பதிவேடு 2025 எடுத்து ஆஜர் செய்தார், அதில் எந்தவித பதிவுகளும் இல்லை. அந்த வருகைபதிவேடு மற்றும் மேற்படி மொத்த தொகை ரூ.52,500/- இந்த திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் முடிவில் தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி செயலர் திரு.ஆ.அன்புராஜாவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 16.07.2025 ஆம் தேதி 14.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின்

ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 16.07.2025 தேதி மாலை 16.30 மணியளவில் மேற்கண்ட புகாரைப்பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரக அறிவுரைப்படி, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2025, ச/பி. 7 of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(கரமேஷ் குமார்) 16.7.2025
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர், எதிரி திரு.A.அன்புராஜா, ஊராட்சி செயலர், தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகம், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் மாவட்டம் மற்றும் அமர்வுகள் நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(கரமேஷ் குமார்) 16.07.2025
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.